உ

சிவமயம்



யாழ்ப்பாணம் — பண்ணாகம்

அமரர்

**அப்பாப்பிள்ளை நடராசா**

(உபஅதிபர் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)

அவர்களின்

# நினைவு மலர்.

23-5-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் — பண்ணாகம்

அமரர்

## அப்பாப்பிள்ளை நடராசா

(உபஅதிபர் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

அவர்களின்

# நினைவு மலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

**அப்பாப்பிள்ளை நடராசா அவர்கள்**

பிறப்பு:
28-12-1931

இறப்பு:
25-04-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



[illegible]

[illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரவாழ் வெய்திய ஆசிரியர்

## திரு. அப்பாப்பிள்ளை நடராசா அவர்களின்

# வாழ்க்கையில் நிகழ்ந்தவை சில.

**தந்தையார்:** பண்ணாகம் சுப்பிரமணியம் அப்பாப்பிள்ளை

*தந்தையுடன் கூடிப் பிறந்தவர்கள்*

1. நவரத்தினம் – சரசுவதி
2. பொன்னம்மா – பொன்னையா

**தாயார்:-** பண்ணாகம் செல்லப்பா மகள் சின்னக்குட்டி

*தாயுடன் கூடிப் பிறந்தவர்கள்*

1. அன்னப்பிள்ளை – சதாசிவம்
2. கிருஷ்ணர் – சின்னம்மா
3. சின்னத்துரை - ————
4. சிவக்கொழுந்து – சின்னத்துரை
5. கணபதிப்பிள்ளை – சுந்தரவல்லி
6. சிறீநிவாசன் -- பரமேஸ்வரி

**இவர் பிறந்த காலம்:-** 28 - 12 - 1931

**ஆரம்பக்கல்வி:-** பண்ணாகம் மெய்கண்டான் ம. வி.
சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி
**(S. S. C)** சி. பா. த பரீட்சையில் சித்தி
யெய்திய பின்னர் 2 ஆண்டுகள் புத்தளம்
அரசினர் பாடசாலையிற் படிப்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியப்பயிற்சி:- 1960 — 1962 காலப்பகுதியில் கொழும் புத்துறை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி யிற் பயின்றார்.

ஆசிரிய சேவை:- பலாங்கொடை அரசினர் பாடசாலை 01 - 01 - 1963 — 31 - 08 - 1970, பண் ணாகம் மெய்கண்டான் ம. வி. 01-09-70 — கடைசிவரை.

திருமணம்:- கரம்பன் சுப்பிரமணியம் பரமேஸ்வரி தம் பதிகளின் மூத்த மகளாய், சோமசுந்தரம், சிவகுருநாதன், வாகீஸ்வரி என்போரின் தமக்கையாய் அமைந்த ஆனந்தீஸ்வரியை 10 - 04 - 64இல் திருமணம் புரிந்தார்.

மக்கட்பேறு:- மூத்தமகள் அருந்ததியை 20 - 05 - 1965 இலும், இளைய மகள் சுமதியை 17 - 06 - 1967 இலும், மகன் சபேசனை 27 - 04 — 1969 இலும் இளைய மகன் கணேசனை 10 - 09 - 74 இலும் பெற்றார்.

பொதுச்சேவை:- பண்ணாகம் கிராம அபிவிருத்திச்சங்கப் பொருளாளராய், பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கத் தலைவராய், விசுவத்தனை முருகமூர்த்தி கோவிற் பரிபாலன சபைத் தர்மகர்த்தா சபை உறுப்பினராய், நிர்வாகஸ்தராய், பண் ணாகம் பல நோக்கக் கூட்டுறவு விற்ப னைச் சங்கத் தலைவராய்ச் சேவை புரிந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தி யாலயத் துணையதிபராக 01 - 01 - 1982 இலிருந்து கடைசிவரை இருந்தவர்.

அமரவாழ்வு:— 23 - 04 - 1991இல் பலவீனங்காரணமான நோயுற்று அன்று வைத்தியசாலைக்குச் சைக்கிள் வண்டியில் இருந்து சென்றவர். பிற்பகல் 4. 30 மணியளவில் அமைதியா கக் கூடுவிட்டுப் பிரிந்து சென்றனர்.

அன்னாரின் ஆத்மா விசவத்தனை முருகப் பெரு மான் திருவடிகளிற் பொருந்திச் சாந்தியடைய வேண்டு மென்று பிரார்த்திக்கின்றோம்.

பண்ணாகம். ஆக்கம்: பண்டிதர் அ. ஆறுமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திர மாலை

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ் சொல் ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெரும் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடி யார்கள் விரைந்துவம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடியீசற்
காட் செய்ம்மின் குழாம்புகுந்து
அண்டங்கடந்த பொருளள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

கண்களிரண்டு அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென்வாழ்வு கடைப்படுமாகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடு மாகாதே
மாலறி யாமலர்ப் பாதமிரண்டும் வணங்குது மாகாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்களி கூர்தரு பாடலொடாடல் பயின்றிடுமாகாதே
பாண்டிநன் னாடுடையான் படையாட்சிகள் பாடுது மாகாதே
விண்களிகூர்தரு வேதகம்வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலைவீசிய கானவன்வந்து வெளிப்படு மாயிடினே.

## முருக மந்திரம்

ஓம்முருகா ஓம்முருகா ஓம்முருகையா
உலகமெலாம் காப்பவனே ஓம்முருகையா
உயர்விசவத் தனையுறைவாய் ஓம்முருகையா
உற்றதுணை நீயேதான் ஓம்முருகையா
வெற்றிவடி வேலவனே ஓம்முருகையா
வேண்டியெனை ஆண்டருள்வாய் ஓம்முருகையா
பச்சைமயில் வாகனனே ஓம்முருகையா
பார்வதியார் பாலகனே ஓம்முருகையா
தெய்வானை வள்ளிபங்கா ஓம்முருகையா
திருவடியிற் சேர்த்தருள்வாய் ஓம்முருகையா.

ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
ஓம்சிவசக்தி சிவாய நம ஓம்
ஓம் சிவ கணேசா சிவாய நம ஓம்
ஓம் சரவணபவ சிவாய நம ஓம்
ஓம் சிவ சிவ சிவ சிவாய நம ஓம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலங்கரை விளக்கம்

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் உருவாக்கிய புகழ்பூத்த ஆசிரிய பரம்பரையில் ஒருவராக ஒளிர்ந்து இவ் வித்தியாலயத்துக்கும், இவ் வூருக்கும் உன்னத சேவை செய்த உத்தமர் அமரர் திரு. அ. நடராஜா அவர்கள். மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கடந்த இருபதாண்டுகளாகச் சிரேட்ட ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் சேவை ஆற்றினார். அதிக நேரம் வித்தியாலய மேம்பாட்டிற்கு உழைத்த பெரியாரை மறக்கவும் முடியுமா? ஆசிரியர் என்ற அடிப்படையில் சிறந்த ஆசானாகவும் பிரதி அதிபர் என்ற வகையில் சிறந்த நிர்வாகியாகவும் இவ்வூர்க் குடிமகன் என்ற கோதாவில் கண்ணை இமை காப்பது போல, வித்தியாலயத்தைக் கண்காணித்த பெருமகனாகவும் விளங்கினார்.

மெய்கண்டான் மகாவித்தியாலய வளர்ச்சியிலும் கருத்தூன்றியும் வித்தியாலய கல்வி அபிவிருத்தியிலும் கடந்த இருபது ஆண்டுகள் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றினார். சலுகைகள் ஊக்குவிப்புகள் அடிப்படையில் புதிய இளைப்பாற்றுத்திட்டம் வந்த போதும் இளைப்பாற விரும்பாது இம்மகா வித்தியாலயத்திற்கும் இவ்வூர் மக்களுக்கும் சேவை செய்வதையே இலக்காகக் கொண்டு வாழ்ந்த அமரர் அவர்கள் நெஞ்சில் நிறைந்த பெரியவர் ஆவார். இவ்வரிய செயல் இவரின் தொழிற்பற்றையும் ஊர்ப்பற்றையும் உணர்த்துகின்றது.

இவரின் திடீர் மறைவு, எங்கள் வித்தியாலயத்திற்கும் ஆசிரியர், மாணவர்களுக்கும் சொலற்கரிய பேரிழப்பாகும். அவரது இடத்தை நிறைவு செய்வார் யாரோ? அவரது பிரிவினால் வாடி நிற்கும் அவரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் அடிச்சுவட்டில் நின்று அவரது குடும்பம் முன்னேற வழக்கம்பரையில் முத்துமாரி அம்மன் அருள்பாலிப்பாராக.

அதிபர்,

*யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம. வி., சுழிபுரம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா / பண்ணாகம் மெய்கண்டான்

# மாதாவின் தவப்புதல்வன்

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் என்று சொன்னால் திரு. அப்பாப்பிள்ளை நடராசாவின் வித்தியாலயமோ என்று கேட்கும் அளவிற்கு வித்தியாலயத்துடன் ஒன்றி வாழ்ந்தவர் அமரர் திரு. அ. நடராசா அவர்கள். காலை ஏழு மணிக்குப் பாடசாலைக்கு வரும் ஆசிரியர் அவர்கள் பிற்பகல் நான்கு மணிவரை வித்தியாலயத்தையே தன்னுறைவிடமாகக் கொண்டவர். அது மட்டுமல்ல, விடுமுறைத்தினங்களிலும் அவரைச் சந்திக்க விரும்புவோர் வித்தியாலயத்தையே நாடி நின்றனர்.

தான் ஆரம்பக்கல்வி பயின்ற மெய்கண்டான் மகாவித்தியாலயத்தை உயர் நிலை அடையச் செய்ய வேண்டுமென்ற இலக்குடன் 1972-ம் ஆண்டு தொடக்கம் நல்லிலக்கணங்கள் பொருந்திய ஆசிரியராய், பிரதி அதிபராய் அரிய சேவை செய்து திடீரென உயிர் நீத்தமை எளிதில் மறக்க முடியாதது. பண்ணாகம் பதியின் பெருமகனாய், தாய்க்கொரு தனிமகனாய் நின்று, தன்னிகரற்ற சேவையால் அனைவர் உள்ளங்களிலும் உறைந்திருக்கும் உத்தமரை ஆண்டவன் தன்னுடன் அணைத்ததும் ஏனோ? இவரின் சுயநலமற்ற சேவையால் உயர்நிலை உற்றமாணவர் குழாம் தான் எத்தனை, எத்தனை, மாணவர் மனங்களில் அறிவொளியைச் செய்து அன்பு வடிவில் நின்ற ஆசிரியர் அவர்களின் சேவை எழுத்தில் வடிக்க முடியாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபருக்கு இனிய துணையாய், ஆசிரியர்களுக்கு நல்ல சகோதரனாய் நின்று மணம் வீசி மாண்புடன் ஒளிர்ந்த தியாகச் செம்மலைக் காலனும் அணுகினனே என்னே கொடுமை. தாடலை போற்கூடிய முத்தி நிலை தான் கைவந்ததோ. எது எப்படியோ, ஒருதவப்புதல்வனை இழந்து தவிக்கின்றது மெய்கண்டான் மகா வித்தியாலயம்.

மாண்புமிகு அமரர் திரு. அ. நடராசா அவர்களின் பணி செம்மை சேர்பணி, திவ்வியபணி, அப்பணியைத் தொடர்ந்து, அவர் கனவை நனவாக்கி, அவரின் ஆத்ம சாந்திக்கு ஆண்டவன் அருளை நாடி நிற்கின்றோம். அவரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைச் செலுத்துகின்றோம்.

பிரிவுத் துயரில் துவளும்,
ஆசிரிய கழகம்,
யா/ பண்ணாகம் மெ. ம. வி.
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மனைவி

பொட்டிழந்தேன் பூவிழந்தேன் புன்னகையும் நானிழந்தேன்
கட்டிவைத்த தாலியையும் கனப்பொழுதில் தானிழந்தேன்
தட்டிஎல்லாம் பறித்துவிட்டு தனிவழியே போனீரோ
குட்டிகள் குழறிஅழ குலமகனே போனதெங்கே?.

சென்றுவா கொழும்புக்குச் சேய்களுக்கு நான்துணை
என்றுதான்என்னை வழிஅனுப்பினீர் நம்பினேன்
நானும்தான்நாதரே
கன்றுகள் கலங்கிட காதலி நான்கதறிட
சென்றதேன் நாதா செய்வதொன்று அறிகிலேன்.

## மகள் அருந்ததி

மணமாலை சூடி மகிழ்வோடு வாழ
வெளி நாடு சென்றேனே அப்பா
பிணமான செய்தி காதிலே கேட்டு
கதறி அழுகின்றேனே அப்பா
கணமேனும் உம்மை மறவாது இருக்க
வழியொன்றும் இல்லை அப்பா
துணையோடு சேர்ந்து இணையாக வாழ
இறையோடு சேர்ந்து எமைவாழ்த்தும்அப்பா.

## மகள் சுமதி

நோயென்று சொல்லி பாயில் படுக்கவில்லை
சேய் என்னைப்பார்த்து 'அடி' என்று அழைப்பீரே
தாய்இங்கே இல்லை தயவு மொன்றில்லை
"பேபி" நீஊட்டிடு உணவென்றீரே அப்பா
பாவி நான் தந்ததோ கடசிதான் உணவு
ஆவிதான் போனதோ அன்புமகள் அழுகின்றேன்அப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் சபேசன்

நாடுவிட்டு நாடு வந்தேன் நலமாய் வாழவென்று
பாடுபட்டுத் தேடிப் பணத்தைச் சேர்த்துவந்து
கூடிஇருந்து நாம் கொண்டாட நினைத்தபோது
காடுசென்ற சேதிகேட்டுக் கலங்குகின்றேன் அப்பா.

## மகன் கணேசன்

படிஎன்று சொல்லி படிப்பித்த வேளையிலே
தடிகொண்டு என்னைத் தண்டித்தது நானறியேன்
இடிபோன்று வந்து முடிதனைச் சாய்த்த
கொடியவன் காலனே கொண்டுவா என் தந்தையை.

## மாமியார்

மகளோடு நீர் கொண்ட மகிழ்வான காதல்
புகழோடு வாழ மணம்புரிய வைத்தேன்
அளவோடு பெற்று நிறைவெய்தும் நாளில்
களவாக வந்து கவர்ந்தானோ காலன்
வளமாக வாழும் வளம்கண்டு வியந்தேன்
வழிந்தோடக் கண்ணீர் தந்தேன் மருமகனே.

## தேற்றம்

மண்ணிலே பிறந்தவர்கள் மண்ணிலே மடிவதுண்மை
விண்ணிற்கு சென்றவர்கள் மீண்டுமிங்கே வருவதில்லை
கண்ணீரைத் துடைத்துவிட்டு கரமிரண்டும் கூப்பி
கண்ணனைத் துதித்து காணுவோம் நலமே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ

# இதயம் விட்டு நீங்காத இனிய பண்பாளர்

எங்களூரின் இரு கண்களாக விளங்குவன விசவத்தனை முருக மூர்த்தி கோவிலும், பண்ணாகம் மெய்கண்டான்மகா வித்தியாலயமுமா கும். அமரர் அப்பாப்பிள்ளை நடராசா அவர்கள் வித்தியாசாலை உப அதிபராக இருக்கும் வேளையில் கோவிலின் தர்மகர்த்தா சபை உறுப்பினராகவும் விளங்கினார்.

திரு. நடராசா அவர்களைச் சிறுபராயம் தொடங்கி யான் அறி வேன். அவர் வாழ்ந்த வீடும், நான் வாழ்ந்த வீடும் மிகவும் அண்மை யில் இருந்தமையால் நாம் விளையாட்டுக்களிலும் பொழுது போக்குகளி லும் கலந்து பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர் எனது மைத்துனரு மாவர். அவர் என்னை எங்கு கண்டாலும் 'மச்சான்' என உரிமை யோடு அழைத்து உசாவுவார். அவர் அமரராவதற்கு இரு தினங்களுக்கு முன்புகூட எமதூர் நாற்சந்தியில் நாம் இருவரும் சந்தித்துப் பல விட யங்களைப் பற்றிப் பேசினோம். அந்த நேரம் அவர் எம்மைவிட்டு இவ் வளவு விரைவாக நீங்குவார் என யான் எண்ணவில்லை. அவர் நோயுற்று வருந்தாமல் பாயிற்கிடவாமல் பரமனடியை அடைந்து விட்டார் என்ற செய்தியை – அன்று செவ்வாய்கிழமை - விசவத்தனை முருகப்பெருமா னின் மாலைப் பூசையைத் தரிசிக்கப் போயிருந்த போது கேட்டு அதிக துயரிழந்தேன். விதியை யார் தான் வெல்ல முடியும்.

அவரது தந்தையார் சுப்பிரமணியம் அப்பாப்பிள்ளை மலேசியா நாட்டில் உழைத்துக் கொண்டிருந்தார். தாயார் சின்னக்குட்டி அம்மை யார் தான் இவரைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தார். இவர் தனிப்பிள்ளை.

இவர் கரம்பொன் ஊரைச் சேர்ந்த சுப்பிரமணியம் பரமேஸ்வரி தம்பதிகளின் அருமை மகள் ஆனந்தீஸ்வரியை தமது வாழ்க்கைத் துணை வியாராக பாணிக்கிரகணஞ் செய்து கொண்டார்.

இவர் புத்தளம் பாடசாலையில் ஆசிரியராக இருந்து அதன் பின் னர் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயின்று பயிற்றப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட ஆசிரியராக பலாங்கொடைக்குச்சென்றார். அங்குசிலகாலமிருந்து தாம் கல்வி பயின்ற ப. மெய்கண்டான் ம. வித்தியாலயத்திற்கு ஆசிரியராக மாற்றம் பெற்றுவந்தார். அவ்வக்காலத்திருந்த அதிபர்களுடன் இணைந்து கடமையாற்றி உப அதிபராயினார்.

பிள்ளைகளுக்குப் பாடம் போதிப்பதிலும் அவர்கள் முன்னேற்றமாக வரவேண்டும் என்பதிலும் பாடசாலை மேலும் மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென்பதிலும் அதிக அக்கறையும் கரிசனையும் கொண்ட சிறந்த ஆசிரியராக விளங்கினார். சைவசமய பாடத்தைச் சிறப்பாகக் கற்பித்துப் பிள்ளைகளிடம் சமயப்பற்று, சிவதொண்டு திருமுறைப் பாராயணப் பழக்கம் மேலோங்கச் செய்வதில் மிகவும் விழிப்பாக இருந்து வந்தார். அத்தோடு நாம் நடத்துகின்றதிருமுறை மனனப்போட்டிகளில் நடுவராக இருந்து சிறந்த முறையில் மதிப்பு எண்கள் கொடுத்துப் பிள்ளைகளுக்கு ஊக்கம் காட்டுவதில் தவறுவதில்லை.

இவரது இல்வாழ்க்கையின் – இல்லறமாம் நல்லறத்தில் இன்புற்றிணைந்து வாழ்ந்த நாளில் அதன் பயனாகிய நன்மக்களை இனிய செல்வங்களாக இரண்டு புதல்வர்களையும் பெற்றெடுத்து மகிழ்ந்தனர். அவர்களுக்கு ஒரு குறையும் ஏற்படாவண்ணம் வளர்த்து ஆளாக்கி கல்வி அறிவொழுக்கங்களை நல்கினார்.

அவர் எங்கள் ஆலயபரிபாலன சபைஉறுப்பினராக பலஆண்டுகளாக இருக்கின்றார். அவர் நிர்வாகஸ்த்தவராகவும் இருந்து சிறந்த தொண்டு செய்தார், வெள்ளிக்கிழமைப் பஜனைப் பூசை ஒன்று செய்து வருகின்றார். ஆறுமுகத்தானின் ஆலயத்தில் நடைபெற்றுவரும் கந்த சஷ்டி 2–வது படிப்பையும் திருவிழாவையும் பல வருடங்களாகச் சிறப்பாகச் செய்து வருகின்றமை யாவரும் அறிந்ததே.

அன்னார் திடீரென்று எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டார். அவரது பிரிவு ஆசிரிய மாணவ உலகுக்குப் பேரிழப்பு, அதுமட்டுமல்ல அவர்தம் குடும்பத்தினருக்குச் சொல்ல முடியாத பேரிழப்பு.

" பேறிழவின்பம் பிணி மூப்புச் சாக்காடு

ஆறும் கருவினுட்பட்டது " தான் நமது வாழ்வு, சமய சாத்திரங்கள் அறுதியிட்டு உறுதி கூறுகின்றன. எனவே அவரவர்க்கு அயன் விதித்தபடியேதான் எல்லாம் நடக்கும் என்பதிலையமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடையது, தானே உலகம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டவர் மீளமாட்டார் என்பதனை ஓர்ந்து அவரைப் பிரிந்துவாடும் அவர் குடும்பத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் ஆறுதல் கூறி அமைதியாக அன்னாரின் ஆத்மா விசவத்தனை முருகப்பெருமானின் பாதகமலங்களில் இன்றமர்ந்திருகப் பிராத்திப்போமாக.

சாந்தி ! சாந்தி ! ! சாந்தி ! ! !

**சைவமணி சோ. க. வேலாயுதர்**
(முன்னாள் நிர்வாக உதவியாளர்
கல்வியமைச்சு)
பொருளாளர் விசவத்தனை முருகன்
கோயில் பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரது சேவை யாவருக்கும் பயன்பட்டது.

காலை கண்டவரை மாலை காண முடியவில்லையே! என்ன உலகம் இது? தினமும் தான் காலை மாலை காண்பவர்களில் ஆசிரியர் அமரர் அ. நடராசாவும் ஒருவராவர். காலை 7 – 30 மணிக்குப் பாடசாலை செல்வதைக் காண்பேன். வழமைபோல் அன்று மாலை இழவுச் செய்தி கேட்டேன். அதிர்ச்சியுற்றேன். இதுவும் ஒருவாழ்வா! யாரைநோவது. எல்லாம்விதிதான்?

அமரர் அ. நடராசா கடமை தவறாமல் தமது காரியங்களைச் செய்து வந்தவராவர். ஆசிரியசேவையில் இருந்து ஒய்வுபெற ஆறு மாதங்களே இன்னும் இருப்பதாக நான் அறிந்தேன். இவர் நோய்கள் சிலவற்றைச் சுமந்தாலும் பாயில் படுத்து யாருக்கும் எவ்வித கஷ்டத்தையும் கொடுக்காது இறைபதம் எய்திய அமரர் சேவையைச் சற்று நினைவு கொள்வோம்.

பண்ணாகம் கிராமத்தவர் இரு கண்களில் ஒன்றாக மதிக்கப்படுவது பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம். இவ் வித்தியாலயத்தில் ஆசிரியராக, உப அதிபராகக் கடமையாற்றிய அமரர் திரு. அ, நடராசா அவர்கள் வித்தியாலய வளர்ச்சியில் அதிக கவனம் எடுத்துக்கண்ணை இமைகாப்பதுபோல் வித்தியாலயத்தை வளர்த்து வந்ததுடன் வித்தியாலய அபிவிருத்தியில் மாணவர்களின் கல்வியில், மற்றும் பொதுப்பணிகளில் எல்லாம் பங்குகொண்டு தொண்டாற்றி விளங்கி வந்துள்ளார்.

அமரர் வித்தியாலய அபிவிருத்திச் சங்கத் தனாதிகாரியாக விளங்கி வந்ததுடன், வித்தியாலய முழுப் பொறுப்பாளர்போல் எல்லாக் காரியங்களையும் நடத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். தினமும் காலை 7—30 மணிக்கு வித்தியாலயம் வரும் ஆசிரியர் இவராவர்.

ஏழ்மையான வாழ்வு வாழ்ந்துவந்தவர். எப்போதும் அமைதியாகவே இருப்பார். விடுமுறை நாட்களி களிலும் இவரை வித்தியாலய அலுவலகத்தில்,கண்டுகொள்ளலாம். இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் யாவருக்கும் பயன்பட்டுவந்ததை நாம் அறிவோம். இவரது பிரிவால் வருந்தும் மனைவி பிள்ளைகள் யாவருக்கும் ஆறுதல் கூறி, அமரரது ஆத்ம சாந்திக்குப் பிராத்திப்போம்.

அபிவிருத்திச் சங்கம்
ப. மெய்கண்டான் ம. வித்தியாலயம்

க. வாமதேவன்
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் தான் மறைந்தீர்!

நாம் பெற்ற தலைவா நடராசா – இப்ப
ஏன்தான் மறைந்தீர் மகாராசா
விலைவாசி ஏறிப்போச்சு
வேதனைகள் கூடிப்போச்சு
வேளை கெட்ட வேளை
என்று மறைந்தீரோ
அவசரமாய் ஏன் மறைந்தீரோ - எம்மை
அவதிப்பட விட்டுப்போனீரோ.

நடராசா நல்ல நடராசா - நீர்
நடத்திய பாடங்கள் பலராசா
எடராசா நீ படிராசா – என
படிப்பித்த மாணவர் பலர் ராசா
இடராக இங்கு எதுவரினும்
தொடராக நீ படிராசா என்று
சுடராகப் பல மாணவரை
உருவாக்கி இங்கே மறைந்தீரே.

கதை பல சொல்லிக்
கல்வியை வளர்த்தீர்
வதை படும் தமிழர்
நிலையது கண்டு
நின்மதி இழந்து
தடுமாறினீரோ
சிதையதில் படுக்க இரண்டொருநாளில்
திடீரென்று முடிவு எடுத்தீரோ
பதைத்திடும் பாலர்கள் பார்த்திருக்க
நினைத்திடும் இறப்பை நாடினீரோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதென்ன சென்றது உமக்கு
போகமனமென்ன வந்தது உமக்கு
தயவின்றி நாமிங்கே கலங்கச்
சென்றதேன் தலைவா கூறும்
துயரும் துன்பமும் நமக்கே
விட்டுச் சென்றீர்தலைவா ஏனோ
நயமும் நலமும் உரைத்திடும்
நாவை நாமினிகாண்போம் எங்கே

பிறப்பதும் இறப்பதும் இயற்கைதான்
மறப்பதும் நினைப்பதும் மனதுதான்
சிறப்பதும் வளர்ப்பதும் கல்விதான்
துறக்கவே முடியாதது அன்புஒன்றுதான்.

எங்கள் சங்கானை ப. நோ. கூ. சங்க கிளை ஐந்தின் தலைவராகவும், சங்கப் பிரதி நிதியாகவும் பதவி வகித்து, அனைவருடனும் அன்புடன் பழகி மறைந்த எமது அன்பு ஆசிரியர் அ. நடராசா அவர்களின் ஆத்மா சாந்தியடைய விசவத்தனை முருகனை வேண்டுகின்றோம். அவர் பிரிவால் துயருறும் மனைவி மக்கள் உறவினர்களுடன் அனைவருடனும் எமது துக்கத்தைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

ஓம்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பண்ணாகம்.
10-05-91

கிளை ஐந்து
நிர்வாகசபை உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையுணர்வுடன் சேவை செய்த உத்தமர்

எமது மன்றத்தின் காப்பாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றி மன்றவளர்ச்சிக்காகப் பலவழிகளிலும் செயற் குழுவுக்கு ஒத்துழைப்பு நல்கியதுடன் சிறந்த ஆலோசக ராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். ஆசிரியர் அவர் கள் மன்றத்தில் மட்டுமல்ல எமது ஊரில் உள்ள பல பொது சன நிறுவனங்களிலும் பணியாற்றியுள்ளார். இவற் றுள் எமது ஊரின் இரு கண்களுள் ஒன்றாகத் திகழும் விசவத்தனை முருகன் ஆலய பரிபாலன சபையில் அங் கம் வகித்து ஆலய வளர்ச்சிக்கு அரிய தொண்டுகள் செய்தார். திருவாளர் நடராசா அவர்கள் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக மட் டும் இருக்கவில்லை. அவர் அதனைத் தனது சொந்த வீடு போலவே பாவித்து அங்கு உள்ள குறை நிறைகளை எல் லாம் கண்காணித்து அவற்றை நிவர்த்திக்குமுகமாகத் தானாகவே முன்னின்று செய்து வந்தார்.

ஆசிரியர் அவர்கள் இளமைக் காலத்தில் மாணவர் களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு மாலை வேளை யிலும் விடுமுறை நாட்களிலும் விசேட வகுப்புகளை நடத்தி அவர்கள் சிறந்த தேர்ச்சிகளைப் பெறுவதற்கு காரணமாயிருந்தார்.

எமது மன்றத்தின் சிறுவர் தினவிழா ஆண்டுபோன் றவற்றுக்கு எங்கள் ஆசிரியர் பல வழிகளிலும் வேண்டிய சகல உதவிகளையும் செய்து ஆற்றிய சேவை மகத்தா னது என்றும் மறக்க முடியாதது. மற்றும் நடாத்திய மாலை நேர வகுப்புகளில் இலவசமாகச் சேவையாற்றி எமது ஊர் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு நல்ல ஒத் துழைப்பு நல்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அவர்கள் உடல் நிலை மிகவும் பாதிப்புற்றிருந்த போதிலும் கடமையுணர்வுடன் சேவையாற்றி எம்மை எல்லாம் வெகு விரைவில் விட்டுப் பிரிந்தமை எமது மன்றத்திற்கு பேரிழப்பாகும். அவரைப் போன்ற ஒருவரின் உதவியை இனிமேல் எம்மால் பெறமுடியுமா? அவரை இழந்து தவிக்கும் அவரின் அன்பு மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் எமது அனுதாபங்களையும் ஆறுதலையும் கூறுகின்றோம். அவர்களின் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல விசுவத்தனை முருகப் பெருமானை வேண்டி அமைகின்றோம்.

பண்ணாகம் அண்ணா கலை மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமகளின் உள்ளக் குமுறல்

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் தவிக்கவிட்டு விட்டு சந்தோசமாகப் போய்ச்சேர்ந்து விட்டீர்களே. உங்கள் பிரிவை எம்மால் தாங்க முடியவில்லை நல்லப்பு அன்பாகப் பேசிவிட்டு சொல்லாமல் போய்விட்டீர்களே.

பள்ளியிலே நீங்கள் வகுப்பறைக்கு வந்தால் பாடமில்லாத தேவாரமும் பாடமாகிவிடும் அப்படிப் பட்ட ஓர் ஆசான் எப்போ கிடைக்கப் போகின்றார்.

உங்கள் பெற்ற மக்கள் போல பெறாமக்களான எங்களையும் பார்த்தீர்கள். ஒவ்வொருநாளும் வீட்டிற்கு வரும் போது படியடி படி பரீட்சை கிட்டுது என்று தான் சொல்வீர்கள். இனி இவற்றைக் கூற ஒருவர் இல்லையே என்று வருந்துகிறேன். நல்லம்மா, சுமதி அக்கா, கணேசன் இவர்களை எல்லாம் தவிக்க விட்டுவிட்டுப் போனீங்களே நல்லப்பு. இயமன் உங்களுக்குப் பாசக் கயிறு வீசும் போதும் இறைவனும் கண்ணை மூடிக் கொண்டிருந்திருக்கின்றான். யாருக்கோ எறிந்த கல் உங்கள் மேல் பட்டதோ ஆண்டவன் சோதனை தான்.

பண்ணாகம் பதியினிலே பொன்னான ஆசிரியர் எல்லோரும் பாத்திருக்கச் சொல்லாமல் போனதென்ன நாம் செய்த பாவம் என்ன.

வாழ்வான வாழ்வுங்களுக்கு வந்ததென்று நாம் இருந்தோம் பாழான வாழ்விதென்று பார்த்தவர்கள் கூறவில்லை. தேனாகப் பேசியதும் அறிவுரைகள் கூறியதும் வீணாகப் போகுமென்று யாரேனும் நினைக்கவில்லை.

பெறாமகள்

சுந்தரமூர்த்தி மாலினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்.

எங்கள் குடும்பத்தலைவர் அவர்கள் மின்னாமல் இடித்தது போல, பெரியநோயோ துன்பமோ இல்லாது எங்களை விட்டுப் பிரிய நேர்ந்தது விதிப்பயனே ஆகும். அந்த வேளையில் விரைந்து வந்து, எம்மைத் தேற்றி, இறுதிக்கடன்களைச் செய்து பெரிதும் உதவிய எங்கள் உறவினர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

நாட்டு நிலைமை காரணமாக நாங்கள் தூர இடங்களில் இருக்கும் உறவினர் நண்பர்களுக்கு செய்தியைச் சரிவரத் தெரிவிக்க முடியவில்லை. எனினும் வானொலியிற் செய்தி அறிந்து திரளாக வந்தவர்களுக்கும், இரங்கற் செய்தி வெளிப்படுத்தி, அநுதாபந் தெரிவித்த மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் ஆசிரியர் மாணவர்களுக்கும், மலர்வளையங்கள் சாத்தியும், மலைகள் அணிந்தும், செய்திகள் அனுப்பியும் சிறப்பித்தவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

இன்று அந்தியேட்டி வைபவத்தில் பங்குபற்றி எமக்கு ஆறுதலளித்த அனைவருக்கும், இந்த நினைவு மலரை உருவாக்கியவர்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

வணக்கம்

பண்ணாகம் — மனைவி, மக்கள்

22-05-1991 — உறவினர்கள்

ஸ்ரீ முருகன் அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவை வாய்ப்பாடு

## மீட்டர் அளவை


10 மில்.மீ - 1 சதம.மீ.
10 சதம.மீ - 1 தசம.மீ.
10 தசம.மீ - 1 மீற்றர்
10 மீற்றர் - 1 தசமீ
10 தசமீ - 1 சதமீ.
10 சதமீ - 1 கிலோமீ.
1 கிலோமீ - 1000 மீ.

## கிராம் அளவை

10 மி.கி 1 சதம.கி.
10 சதம.கி 1 தசம.கி.
10 தசம.கி 1 கிராம்
10 கிராம் 1 தச.கி.
10 தச.கி 1 சத.கி.
10 சத.கி 1 கிலோகி.
1 கிலோ கி 1000 கிராம்

## முகத்தலளவை

10 மி லீற் 1 சதம லீற்.
10 சதம லீற் 1 தசம லீற்.
10 தசம லீற் 1 லீற்றர்
10 லீற்றர் 1 தச லீற்.
10 தச லீற் 1 சத லீற்.
10 சத லீற் 1 கி.லீற்



## பொருள் அளவை

12 பொருள் 1 டசின்
12 டசின் 1 குரோஸ்
20 பொ. 1 ஸ்கோர்
24 தாள் 1 குவையர்
20 குவையர் 1 றீம்

## அளவு

உருளை :- (h உருளையின் நீளம்)
பரப்பு $= 2\pi rh$
கன அளவு $= \pi r^2 h$

வட்டம் :-
சுற்றளவு $= 2\pi r$
பரப்பு $= \pi r^2$

கோளம் :-
கன அளவு $= \frac{4}{3}\pi r^3$
பரப்பு $= 4\pi r^2$

கூம்பு :-
கன அளவு $= \frac{1}{3}\pi r^2 h$
(h அடிக்கான செங்குத்துயரம்)
பரப்பு $= \pi r l$
(l சாய்வு நீளம்)

முக்கோணம்
பரப்பு = ½ அடி x செங்குத்துயரம்

## சதுரம்

பரப்பு = (நீளம்)²

செவ்வகம் :- பரப்பு = நீளம் x அகலம்

[r : ஆரை $\pi$ : 22/7]

சைன் $\theta = \frac{\text{எதிர்பக்கம்}}{\text{செம்பக்கம்}}$


கோசைன் $\theta = \frac{\text{அயல்பக்கம்}}{\text{செம்பக்கம்}}$

தான்சன் $\theta = \frac{\text{எதிர்பக்கம்}}{\text{அயல்பக்கம்}}$

கோசீக்கன் $\theta = \frac{\text{செம்பக்கம்}}{\text{எதிர்பக்கம்}}$

சீக்கன் $\theta = \frac{\text{செம்பக்கம்}}{\text{அயல்பக்கம்}}$

கோதான்சன் $\theta = \frac{\text{அயல்பக்கம்}}{\text{எதிர்பக்கம்}}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org